**மிகவும் அவசரம்**

அனுப்புநர்
திரு.பெ.கா.வேணுசேகரன் B.Sc.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1. முதன்மை கல்வி அலுவலர்,
வேலூர்/இராணிப்பேட்டை/திருப்பத்தூர்
2. மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர்/திருப்பத்தூர்/வாணியம்பாடி/
இராணிப்பேட்டை/அரக்கோணம்.

ந.க.கே6/1500/2020, நாள் : .02.2021

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் நலம் - வேலூர் மாவட்டம் - 2020-21ஆம் கல்வியாண்டு - ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் - அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/மேனிலைப்பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் SC, ST, SCC மாணாக்கர்களின் புதிய (FRESH) விண்ணப்பங்களை 13.02.2021ஆம் தேதிக்குள் இணைய வழியில் விண்ணப்பித்து சமர்ப்பிக்க அறிவுறுத்தக் கோருதல் - தொடர்பாக.

பார்வை : சென்னை, ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரக தொலைப்பேசி செய்தி, நாள்:09.02.2020

*****

பார்வையில் காணும் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரக தொலைப்பேசி செய்தியில் இணைய வழியில் பெறப்பட்டு வரும் போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகை புதிய விண்ணப்பங்களை 09.02.2021 முதல் திறக்கப்பட்டு 13.02.2021 மாலையில் நிறுத்தம் செய்யப்படும் என்பதையும், நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் பள்ளிகளின் நிலுவை விண்ணப்பங்களை இயன்முறையில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும், விண்ணப்பங்கள் பெறப்படும் தேதியினை எக்காரணத்தை கொண்டும் நீட்டிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒருங்கிணைந்த (இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள் உட்பட) வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/மேனிலைப்பள்ளிகளில் 2020–21ஆம் கல்வியாண்டில் ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் SC, ST, SCC மாணாக்கர்களின் புதிய விண்ணப்பங்களை (FRESH APPLICATION) இணைய தளத்தில் 09.02.2021 முதல் 13.02.2021ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து அதன் விவரங்களை வேலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், தகுதியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற இணைய வழியில் விண்ணப்பிக்க தவறும் தலைமையாசிரியர்களே அதற்கான முழு பொறுப்பாவார் என்பதை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: விளக்க குறிப்பு

10.2.2021

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

10/02/21

நகல்:
1. மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் / இராணிப்பேட்டை / திருப்பத்தூர்
2. ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை-5

} தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned with CamScanner